இந்திய அரசு
சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

# அரசமைப்பு (நூற்று ஒன்றாம் திருத்தச்) சட்டம்,2016

# THE CONSTITUTION (ONE HUNDRED AND FIRST AMENDMENT) ACT, 2016

தமிழாக்கம்:
இந்திய அரசுக்காக
சட்ட (ஆட்சி மொழிப் பிரிவு)த் துறை
தலைமைச்செயலகம்
சென்னை– 600 009

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை சிறப்பு ஆணையர்
மற்றும் ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
2018

# அரசமைப்பு (நூற்று ஒன்றாம் திருத்தச்) சட்டம்,2016

[2016, செப்டம்பர் 8]

இந்திய அரசமைப்பை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஏழாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச்சட்டம், அரசமைப்பு (நூற்று ஒன்றாம் திருத்தச்) சட்டம், 2016 என்று வழங்கப்பெறும்.

(2) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, குறித்திடலாகும், அத்தகைய தேதியன்று செல்லாற்றல் பெறும், மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகையங்களுக்காக வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம் மற்றும் அத்தகைய வகையம் எதிலும் இந்தச் சட்டத்தின் தொடக்க நிலைக்கான சுட்டுகை எதுவும் அந்த வகையத்தின் தொடக்கத்திற்கான ஒரு சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

246அ புதிய உறுப்பு புகுத்தப்படுதல்.

2. அரசமைப்பின் 246 ஆம் உறுப்பிற்குப் பின்பு, பின்வரும் உறுப்பு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

“246அ. சரக்குகள் மற்றும் சேவைகள் வரியைப் பொறுத்து தனியுறு வகையம்:

(1) 246 மற்றும் 254 ஆகிய உறுப்புகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், ஒன்றியத்தாலோ மாநிலத்தாலோ விதிக்கப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியைப் பொறுத்து சட்டங்கள் இயற்றுவதற்கு நாடாளுமன்றமும், (2) ஆம் கூறுக்கு உட்பட்டு, ஒவ்வொரு மாநிலச் சட்டமன்றமும், அதிகாரம் உடையன ஆகும்.

(2) சரக்குகள், அல்லது சேவைகள், அல்லது அவை இரண்டின் வழங்கீடு மாநிலங்களிடையேயான வணிகத்தின் அல்லது வாணிபத்தின் போது நிகழ்கிறவிடத்து சரக்குகள் மற்றும் சேவைகள் வரியைப் பொறுத்து சட்டங்கள் இயற்றுவதற்கு, நாடளுமன்றமே தனிநிலை அதிகாரம் உடையது ஆகும்.

**விளக்கம்.-** 279அ உறுப்பின் (5) ஆம் கூறில் சுட்டப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பொறுத்து, இந்த உறுப்பின் வகையங்கள், சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தால் பரிந்துரைசெய்யப்படும் தேதியிலிருந்து செல்திறம் பெறும்”.

248 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

3. அரசமைப்பின் 248 ஆம் உறுப்பில், (1) ஆம் கூறில், “நாடாளுமன்றமே” என்ற சொற்களுக்குப் பதிலாக, “246அ உறுப்பிற்கு உட்பட்டு, நாடாளுமன்றமே” என்ற சொற்களும், எண்களும் எழுத்தும் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

4. அரசமைப்பின் 249 ஆம் உறுப்பில், (1) ஆம் கூறில், "பொறுத்து" என்ற சொல்லுக்குப் முன்பு, "246அ உறுப்பின்படி வகைசெய்யப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி" என்ற சொற்களும், எண்களும், எழுத்தும், அதற்குப் பின்பு, "அல்லது" என்ற சொல்லும் புகுத்தப்படுதல் வேண்டும். 249 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

5. அரசமைப்பின் 250 ஆம் உறுப்பில், (1) ஆம் கூறில், "பொறுத்தும்" என்ற சொல்லுக்கு முன்பு, "246அ உறுப்பின்படி வகைசெய்யப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி" என்ற சொற்களும், எண்களும், எழுத்தும், அதற்குப் பின்பு, "அல்லது" என்ற சொல்லும் புகுத்தப்படுதல் வேண்டும். 250 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

6. அரசமைப்பின் 268 ஆம் உறுப்பில், (1) ஆம் கூறில், "மருந்து மற்றும் ஒப்பனைப் பொருள்களின் மீதான ஆயத் தீர்வைகளும்" என்ற சொற்கள் விட்டுவிடப்படுதல் வேண்டும். 268 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

7. 2003 ஆம் ஆண்டு அரசமைப்பு (எண்பத்தி எட்டாம் திருத்தச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் புகுத்தப்பட்டவாறான, அரசமைப்பின் 268 அ உறுப்பு விட்டுவிடப்படுதல் வேண்டும். 268அ உறுப்பு விட்டுவிடப்படுதல்.

8. அரசமைப்பின் 269 ஆம் உறுப்பில், (1) ஆம் கூறில், "சரக்குகளின் அனுப்புகை" என்ற சொற்களுக்குப் பின்பு, "269அ உறுப்பில் வகைசெய்யப்பட்டவாறல்லாமல்" என்ற சொற்களும், எண்களும், எழுத்தும் புகுத்தபடுதல் வேண்டும். 269 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

**9.** அரசமைப்பின் **269** ஆம் உறுப்பிற்குப் பின்பு, பின்வரும் உறுப்பு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 269அ புதிய உறுப்புப் புகுத்தப்படுதல்.

“269அ. மாநிலங்களிடையேயான வணிகத்தின் அல்லது வாணிபத்தின் போது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதித்து ஈட்டுதல்:

(1) மாநிலங்களுக்கிடையேயான வணிகத்தின் அல்லது வாணிபத்தின் போது வழங்கீடுகளின் மீதான சரக்குகள் மற்றும் சேவைகள் வரி இந்திய அரசால் விதித்து ஈட்டப்படுதல் வேண்டும் மற்றும் அத்தகைய வரி, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் பரிந்துரையின் பேரில் நாடாளுமன்றத்தால் சட்டத்தினால் வகுத்துரைக்கப்படலாகும் முறையில் ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே பங்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

**விளக்கம்.-** இந்தக் கூறின் நோக்கங்களுக்காக, இந்திய ஆட்சிநிலவரைக்குள் இறக்குமதி செய்யும் போது சரக்குகள், அல்லது சேவைகள், அல்லது அவை இரண்டின் வழங்கீடு, மாநிலங்களிடையேயான வணிகத்தின் அல்லது வாணிபத்தின் போதான சரக்குகள், அல்லது சேவைகள் அல்லது அவை இரண்டின் வழங்கீடாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2). (1) ஆம் கூறின்படி மாநிலம் ஒன்றிற்குப் பங்கீடு செய்யப்படும் தொகை இந்தியத் திரள் நிதியத்தை சேர்வதாகாது.

(3). (1) ஆம் கூறின்படி விதிக்கப்படும் வரியாக ஈட்டப்படும் தொகையொன்று 246அ உறுப்பின்படி ஒரு மாநிலத்தால் விதிக்கப்படும் வரியைச் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய தொகை, இந்தியத் திரள் நிதியத்தை சேர்வதாகாது.

(4) 246அ உறுப்பின்படி ஒரு மாநிலத்தால் விதிக்கப்பட்ட வரியாக ஈட்டப்பட்டும் தொகையொன்று (1) ஆம் உட்பிரிவின்படி விதிக்கப்படும் வரியைச் செலுத்துவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய தொகை, மாநிலத் திரள் நிதியத்தை சேர்வதாகாது.

(5) மாநிலங்களிடையேயான வணிகத்தின் அல்லது வாணிபத்தின் போது சரக்குகள், அல்லது சேவைகள், அல்லது அவை இரண்டின் வழங்கீட்டு இடத்தையும், வழங்கீடு ஒன்று நிகழ்வது எப்போது என்பதையும் தீர்மானிப்பதற்கான நெறிகளை நாடாளுமன்றம், சட்டத்தினால், வகுக்கலாம்."

10. அரசமைப்பின் 270 ஆம் உறுப்பில்,- 270 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

(i). (1) ஆம் கூறில், "268, 268அ மற்றும் 269 ஆகிய உறுப்புகள்", என்ற சொற்களுக்கும், எண்களுக்கும், எழுத்துக்கும் பதிலாக, "268, 269 மற்றும் 269அ ஆகிய உறுப்புகள்" என்ற சொற்களும், எண்களும், எழுத்தும் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) .(1) ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறுகள் புகுத்தப்படுதல் வேண்டும் , அவையாவன:-

"(1அ). 246அ உறுப்பின் (1) ஆம் கூறின்படி ஒன்றியத்தால் ஈட்டப்படும் வரியும் கூட, (2) ஆம் கூறில் வகை செய்யப்பட்ட முறையில் ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

(1 ஆ) 246அ உறுப்பின் (1) ஆம் கூறின்படி ஒன்றியத்தால் விதிக்கப்படும் வரியைச் செலுத்ததுவதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கும், 246அ உறுப்பின் (2) ஆம் கூறின் படியும் 269அ உறுப்பின்படியும், ஒன்றியத்தால் விதித்து ஈட்டப்படும் வரியும், 269அ உறுப்பின் (1) ஆம் கூறின்படி ஒன்றியத்திற்குப் பங்கீடு செய்யப்படும் தொகையும் கூட, (2) ஆம் கூறில் வகை செய்யப்பட்ட முறையில் ஒன்றியத்திற்கும் மாநிலங்களுக்கும் இடையே பகிர்ந்தளிப்படுதல் வேண்டும்."

271 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

11. அரசமைப்பின் 271 ஆம் உறுப்பில், "அந்த உறுப்புகளில்" என்ற சொற்களுக்குப் பின்பு, "246அ உறுப்பின்படி சரக்குகள் மற்றும் சேவைகள் வரி தவிர" என்ற சொற்களும், எண்களும், எழுத்தும், புகுத்தப்படுதல் வேண்டும்.

279 அ புதிய உறுப்புப் புகுத்தப்படுதல்.

12. அரசமைப்பின் 279 ஆம் உறுப்பிற்குப் பின்பு, பின்வரும் உறுப்பு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :-

“279 அ. சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம்:

(1) 2016 ஆம் ஆண்டு அரசமைப்பு (நூற்றி ஒன்றாம் திருத்தச்) சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து அறுபது நாட்களுக்குள், குடியரசுத்தலைவர், ஆணையின் வழி, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் என வழங்கும் மன்றம் ஒன்றை அமைப்பார்.

(2) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம், பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும், அவர்களாவர்:-

(அ) ஒன்றியத்து நிதி அமைச்சர் ............................ தலைமையர்;

(ஆ) வருவாய் அல்லது நிதித் துறையைப்பொறுப்பில் கொண்டுள்ள ஒன்றியத்து இணைஅமைச்சர்........... உறுப்பினர்.

(இ) ஒவ்வொரு மாநில அரசாலும் நியமனம் செய்யப்பெறும் நிதி அல்லது வரிவிதிப்புத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர் அல்லது பிற அமைச்சர் எவரும்........... உறுப்பினர்கள்.

(3). (2) ஆம் கூறின் (இ) உட்கூறில் குறிப்பிடப்பட்ட சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் உறுப்பினர்கள்,

கூடிய விரைவில், தாம் முடிவு செய்யலாகும் அத்தகைய கால அளவிற்கு தங்களிடமிருந்து ஒருவரை மன்றத்தின் துணைத் தலைமையராகத் தெரிந்தெடுப்பர்.

(4) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம்—

(அ) சரக்குகள் மற்றும் சேவைகள் வரியில் உட்படுத்தப்படுவதாகும் ஒன்றியத்தாலும், மாநிலங்களாலும், உள்ளாட்சி அமைப்புகளாலும் விதிக்கப்படும் வரிகள், மேல்வரிகள் மற்றும் மேல் கட்டணங்கள் மீதும்;

(ஆ) சரக்குகள் மற்றும் சேவைகள் வரிவிதிப்பிற்கு உட்படலாகும், அல்லது அதிலிருந்து விலக்களிக்கப்படலாகும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீதும்;

(இ) மாதிரி சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டங்கள், 269அ உறுப்பின்படி மாநிலங்களிடையேயான வணிகத்தின் அல்லது வாணிபத்தின் போது வழங்கீடுகளின் மீது விதிக்கப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை விதிக்கும், பங்கீடு செய்யும் நெறிகள் மற்றும் வழங்கீட்டு இடத்தை நெறிப்படுத்தும் நெறிகள் மீதும்;

(ஈ) எந்தக் கீழ்நிலை வணிகத் தொகையின் அளவிற்குக் கீழ் சரக்குகளும் சேவைகளும் சரக்குகள் மற்றும் சேவைகள் வரியிலிருந்து விலக்களிக்கப்படலாகுமோ அந்தக் கீழ்நிலை அளவு மீதும்;

(உ) சரக்குகள் மற்றும் சேவைகள் வரிக் கட்டுகளுடன் அடிநிலை வீதங்கள் உள்ளடங்கலான வீதங்கள் மீதும்;

(ஊ) இயற்கைப் பேரிடர் அல்லது பேராபத்து எதன்போதும் கூடுதல் வருவாய் ஆதாரங்களைத் திரட்டும் பொருட்டு, குறித்துரைக்கப்பட்ட காலஅளவு ஒன்றிற்குத் தனியுறு வீதம் அல்லது வீதங்கள் மீதும்;

(எ) அருணாச்சலப் பிரதேசம், அசாம், ஜம்மு-காஷ்மீர், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, இமாச்சலப்பிரதேசம் மற்றும் உத்திரகாண்ட் ஆகிய மாநிலங்களைப் பொறுத்து தனியுறு வகையம் மீதும்; மற்றும்

(ஏ) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி பொறுத்து, மன்றம் முடிவு செய்யலாகும் பிற பொருட்பாடு எதன்மீதும்;

ஒன்றியத்துக்கும் மாநிலங்களுக்கும் பரிந்துரைகளைச் செய்தல் வேண்டும்.

(5) சுத்திகரிக்கப்படாத கல்லெண்ணெய், அதிவேக டீசல், (கல்லெண்ணெய் என பொதுவாக வழங்கப்படும்) இயக்க சாராவி, இயற்கை எரிவாயு மற்றும் வானப்பயண விசையாழி எரிபொருள் ஆகியவற்றின் மீது எந்தத் தேதியன்று சரக்குகள் மற்றும் சேவைகள் வரி விதிக்கப்படும் என்பதை சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் பரிந்துரை செய்தல் வேண்டும்.

(6) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம், இந்த உறுப்பினால் அளிக்கப்பட்ட செயற்பணிகளை ஆற்றுகையில், சரக்குகள் மற்றும் சேவைகள் வரியின் நல்லிணக்கமான கட்டமைப்பிற்கும் சரக்குகள் மற்றும் சேவைகளுக்கு நல்லிணக்கமானதொரு தேசிய வாணிகக்களத்தை வளர்ப்பதற்குமான தேவையின் போக்கில் வழிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(7) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் ஒரு பாதிப் பகுதியினர் அதன் கூட்டங்களின் குறைவெண்ணாக அமைவர்.

(8) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம், அதன் செயற்பணிகளைப் புரிவதில் நெறிமுறையினைத் தீர்மானித்தல் வேண்டும்.

(9) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் கூட்டம் ஒன்றில், வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மதிப்பீட்டு

வாக்குகளில் நான்கில் மூன்று பகுதியினருக்குக் குறையாத பெரும்பான்மையினரால், பின்வரும் கோட்பாடுகளுக்கு இணங்க, ஒவ்வொரு முடிவும் எடுக்கப்படுதல் வேண்டும். அவையாவன:-

அந்தக் கூட்டத்தில்,

(அ) அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில், மைய அரசின் வாக்கு, மூன்றில் ஒரு பங்கு மதிப்புடையதாகும், மற்றும்

(ஆ) அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் மாநில அரசுகள் அனைத்தின் வாக்குகளும், ஒன்றாகச் சேர்த்து கணக்கிட்டு, மூன்றில் - இரண்டு பங்கு மதிப்புடையதாகும்.

(10) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் செயல் அல்லது நடவடிக்கைகள் எவையும்-

(அ) மன்றத்தின் அமைப்பாக்கத்திலுள்ள காலியிடம் எதனின், அல்லது குறைபாடு எதனின்; அல்லது

(ஆ) மன்றத்தின் உறுப்பினராக ஒருவரின் அமர்த்தத்திலுள்ள குறைபாடு எதனின்;அல்லது

(இ) நேர்வின் தகுதிகளைப் பாதிக்காத மன்றத்தின் நெறிமுறைகள் சார்ந்த குறைபாடு எதனின்,

காரணமாக மட்டுமே செல்லாநிலையது ஆகாது.

(11) சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் பரிந்துரைகளிலிருந்து அல்லது அவற்றைச் செயற்படுத்துவதிலிருந்து -

(அ) இந்திய அரசுக்கும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கும் இடையே; அல்லது

(ஆ) இந்திய அரசும் மாநிலம் எதுவும் அல்லது மாநிலங்கள் எவையும் ஒருபுறமும் ஒன்று அல்லது அதற்கு மேற்படும் மாநிலங்கள் மறுபுறமும் இவற்றிற்கு இடையே; அல்லது

(இ) இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்படும் மாநிலங்களுக்கு இடையே,

எழும் பூசல் எதனையும் நீதிமுறையில் தீர்மானிப்பதற்க்கு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றம் இயங்கும் செயலமைவு ஒன்றை அமைத்தல் வேண்டும்.

13. அரசமைப்பின் 286 ஆம் உறுப்பில்,- 286 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

(i). (1) ஆம் கூறில்,-

(அ) "சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினைநிகழுமிடத்து, அத்தகைய விற்பனை அல்லது கொள்வினை " என்ற சொற்களுக்குப் பதிலாக, " சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது அவை இரண்டின் வழங்கீடு நிகழுமிடத்து அத்தகைய

வழங்கீடு" என்ற சொற்கள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ஆ). (ஆ) உட்கூறில் " அச்சரக்குகளை" என்ற சொல்லுக்குப் பதிலாக, அது வரும் இரு இடங்களிலும், "அச்சரக்குகளை அல்லது சேவைகளை அல்லது அவை இரண்டையும்" என்ற சொற்கள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii). (2) ஆம் கூறில், "சரக்குகளின் விற்பனை அல்லது கொள்வினை நிகழுமிடத்து" என்ற சொற்களுக்குப் பதிலாக "சரக்குகளின் அல்லது சேவைகளின் அல்லது அவை இரண்டின் வழங்கீடு" என்ற சொற்கள் மாற்றாகஅமைக்கப்படுதல் வேண்டும்;

(iii). (3) ஆம் கூறு விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**14.** அரசமைப்பின் **366** ஆம் உறுப்பில்,- 366 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

(i). **(12)** ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:-

'**(12அ)** "சரக்குகள் மற்றும் சேவைகள் வரி" என்பது, மனிதர் நுகர்வதற்கான வெறியம் கலந்த மதுக்குடிவகை வழங்கீட்டின் மீதான வரிகள் தவிர சரக்குகள், அல்லது சேவைகள் அல்லது இரண்டின்

வழங்கீட்டின் மீதான வரி எதுவும் என்று பொருள்படும்;'

(ii). (26) ஆம் கூறுக்கு பின்பு, பின்வரும் கூறுகள் புகுத்தப்படுதல் வேண்டும். அவையாவன;-

'(26அ ) "சேவைகள்" என்பது, சரக்குகள் அல்லாத பிற ஏதேனுமொன்று என்று பொருள்படும்;

(26ஆ) "மாநிலம்" என்பது, 246அ, 268,269,269அ ஆகிய உறுப்புகள் மற்றும் 279அ உறுப்பு குறித்து, சட்டமன்றத்தைக் கொண்டுள்ள ஓர் ஒன்றியத்து ஆட்சிநிலவரையை உள்ளடக்குவதாகும்.

368 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

15. அரசமைப்பின் 368 ஆம் உறுப்பில், (2) ஆம் கூறில், வரம்புரையில், (அ) கூறில், "162 ஆம் உறுப்பு அல்லது 241 ஆம் உறுப்பு" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "162 ஆம் உறுப்பு, 241ஆம் உறுப்பு அல்லது 279அ உறுப்பு" என்ற சொற்களும், எண்களும், எழுத்தும் மாற்றாகஅமைக்கப்படுதல் வேண்டும்.

ஆறாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

16. அரசமைப்பிற்கான ஆறாம் இணைப்புப்பட்டியலில், 8 ஆம் பத்தியில், (3) ஆம் உள் பத்தியில்,-

(i). (இ) கூறில், இறுதியில் வரும் "மற்றும்" என்ற சொல் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ii). (ஈ) கூறில் "மற்றும்" என்ற சொல் இறுதியில் புகுத்தப்படுதல் வேண்டும்.

(iii). (ஈ) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும். அதாவது:-

"(உ) பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் களிப்பூட்டும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் மீதான வரிகள்"

17. அரசமைப்பிற்கான ஏழாம் இணைப்புப்பட்டியலில்,- ஏழாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

(அ) பட்டியல் -1 இல் – ஒன்றியத்துப் பட்டியல்:-

(i) 84 ஆம் பதிவுக்குப் பதிலாக, பின்வரும் பதிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். அதாவது:-

"84 இந்தியாவில் உற்பத்திசெய்யப்பட்ட அல்லது உண்டாக்கப்பட்ட பின்வரும் சரக்குகளின் மீதான ஆயத் தீர்வைகள், அவையாவன:-

(அ) சுத்திகரிக்கப்படாத கல்லெண்ணெய்;

(ஆ) அதி வேக டீசல்;

(இ) (கல்லெண்ணெய் என பொதுவாக வழங்கப்படும்) இயக்க சாராவி;

(ஈ) இயற்கை எரிவாயு;

(உ) வான்பயண விசையாழி எரிபொருள்;மற்றும்;

(ஊ) புகையிலை மற்றும் புகையிலை பொருட்கள்";

(ii) 92 மற்றும் 92 இ ஆகிய பதிவுகள்

விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(ஆ) பட்டியல் –IIஇல் – மாநிலத்துப் பட்டியல்,-

(i) 52 ஆம் பதிவு விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(ii) 54 ஆம் பதிவிற்குப் பதிலாக, பின்வரும் பதிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

“54 சுத்திகரிக்கப்படாத கல்லெண்ணெய், அதி வேக டீசல், (கல்லெண்ணெய் என பொதுவாக வழங்கப்படும்), இயக்க சாராவி, இயற்கை எரிவாயு, வானப்பயண விசையாழி எரிபொருள் மற்றும் மனிதர் நுகர்வதற்கான வெறியம் கலந்த மதுக்குடிவகை ஆகியவற்றின் விற்பனையின், ஆனால் மாநிலங்களிடையேயான வணிகத்தின் அல்லது வாணிபத்தின்போதோ அல்லது பன்னாட்டிடை வணிகத்தின் அல்லது வாணிபத்தின்போதோ அத்தகைய சரக்குகளின் விற்பனை நீங்கலான விற்பனையின் மீதான வரிகள்,”

(iii) 55 ஆம் பதிவு விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(iv) 62ஆம் பதிவிற்குப் பதிலாக, பின்வரும் பதிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

அதவாது :-

"62 ஓர் ஊராட்சி அல்லது ஒரு நகராட்சி அல்லது ஒரு மண்டல மன்றம் அல்லது ஒரு மாவட்ட மன்றம் விதித்து ஈட்டும் அளவிற்கு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் மற்றும் களிப்பூட்டும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் மீதான வரிகள்"

சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை அறிமுகப்படுத்தியதன் காரணமாக வருவாய் இழப்பிற்காக மாநிலங்களுக்கு சரியீடு வழங்குதல்.

**18.** சரக்குகள் மற்றும் சேவைகள் வரியை செயல்படுத்துவதன் காரணமாக எழும் வருவாய் இழப்பிற்கு , ஐந்தாண்டு காலஅளவு ஒன்றிற்கு மாநிலங்களுக்கு சரியீடு வழங்குவதற்காக சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் பரிந்துரையின் பேரில் நாடாளுமன்றம், சட்டத்தினால்,வகை செய்தல் வேண்டும்.

மாறும் இடைக் காலத்திற்கான வகையங்கள்.

**19.** இந்தச் சட்டத்திலுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு மாநிலம் எதிலும் செல்லாற்றலிலுள்ள இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான அரசமைப்பின் வகையங்களுக்கு முரணாக இருக்கிற சரக்குகள் அல்லது சேவைகள் அல்லது அவை இரண்டின் மீதும் வரிவிதிப்பது தொடர்பான சட்டம் எதனின் வகையம் எதுவும், தகுதிறமுள்ள சட்டமன்றத்தினாலோ அல்லது பிற தகுதிறமுள்ள அதிகாரஅமைப்பினாலோ திருத்தமோ அல்லது நீக்கறவோ செய்யப்படும் வரையில் அல்லது அத்தகைய

தொடக்கநிலையிலிருந்து ஓராண்டு கழிவுறும் வரையில் இவற்றில் எது முந்தியதோ அது வரையில் தொடர்ந்து செல்லாற்றலில் இருந்துவருதல் வேண்டும்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கு குடியரசுத் தலைவருக்குள்ள அதிகாரம்.

20. (1) (இந்தச் சட்டத்திற்கு குடியரசுத்தலைவர் ஏற்பிசைவளித்த தேதிக்கு முன்பு இருந்தவாறான அரசமைப்பின் வகையங்களிலிருந்து இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான அரசமைப்பின் வகையங்களுக்கு மாறும் இடைக்காலம் தொடர்பான இடர்பாடு எதுவும் உள்ளங்கலான) இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான அரசமைப்பின் வகையங்களுக்குச் செல்திறம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், குடியரசுத்தலைவர், ஆணையின் வழி, அந்த இடர்பாடுகளை அகற்றும் நோக்கத்திற்காக குடியரசுத்தலைவருக்குத் தேவையென அல்லது உகந்ததெனத் தோன்றுகிற, இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான அரசமைப்பின் வகையம், அல்லது சட்டம் எதனின் தழுவமைவு அல்லது மாற்றமைவு எதுவும் உள்ளடங்கலான அத்தகைய வகையங்களைச் செய்யலாம்:

**வரம்புரையாக** : அத்தகைய ஏற்பிசைவின் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கழிவுற்ற பின்பு அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஆணை

ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.